தினமலர்
உண்மையின் உரைகல்
DINAMALAR
National Tamil Daily

# ‘உடனே சான்றளிக்கப்பட்ட நாற்றுப்பண்ணை வேண்டும்’

**கோவை, மார்ச் 17–**
கோவை வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தில், பசுமைத்திறன் மேம்பாட்டுத் திட்ட பயிற்சி நிறைவு விழா நடந்தது.

பயிற்சி முடித்த தமிழகம், மஹாராஷ்டிராவை சேர்ந்த 19 பேருக்கு, மரப்பெருக்கு நிறுவன இயக்குனர் டாக்டர் முருகேசன் சான்றிதழ் வழங்கினார்.

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவும் நோக்கத்துடன், தரமான நடவு பொருள் உற்பத்தி தயார் செய்வது குறித்து, முதுநிலை முதன்மை விஞ்ஞானி டாக்டர் கண்ணன் வாரியர் தலைமையில், 30 நாள் இலவச பயிற்சி அளிக்கப்பட்டது.

விழாவில், மரப்பெருக்கு நிறுவன இயக்குனர் டாக்டர் முருகேசன் பேசுகையில், ‘‘தற்போதுள்ள நாற்றுப்பண்ணைகளின் மூலம், 30 முதல் 40 சதவீதம் நடவு பொருட்கள் மட்டுமே தயார் செய்ய முடிகிறது. எனவே, தரமான நடவு பொருள் சப்ளை செய்வதற்காக, சான்றளிக்கப்பட்ட நாற்றுப் பண்ணைகள் உடனடியாக அமைக்க வேண்டும்,’’ என்றார்.

166. News in Dinamalar, Coimbatore, 17.03.2020, Completion of Green Skill Development Programme on Quality Planting Material Producer by IFGTB ENVIS.